**மாகாண கல்வி திணைக்களம் சப்ரகமுவ- வார பாடசாலை**

**பாடம்:வணிகக் கல்வி**

**வாரம்:2**

**தரம்: 12**

**தேர்ச்சி 1.0**:வணிக அடிப்படைகளையும் வணிகங்கள் செயற்படுகின்ற சூழலையும் தேடியறிவர்

**தேர்ச்சி மட்டம் 1.2**: வணிகங்களது பரம்பலையும் அதன் போக்குகளையும் அறிந்து கொள்வர்

பண்டைய சமூகத்தில் சுயதேவைப்பூரத்தி முறை காணப்பட்டது

**சுயதேவைப்பூரத்தி முறை**

தமது தேவைகளை தமது உற்பத்திகளின் மூலமே பூர்த்தி செய்து கொள்வதற்கு போதுமான வளங்களைக் (பண்டம் மற்றும் சேவை) கொண்ட உற்பத்தி சுயதேவை பூரத்தி முறையாகும்

**நேர் உற்பத்தி**

தனது நுகர்வுக்குத் தேவையான பண்டங்களையும் சேவைகளையும் தானே உற்பத்தி செய்து கொள்வது " நேர் உற்பத்தி" எனப்படும்.

**சிறப்புத் தேர்ச்சி**

தனி நபர் அல்லது குழுக்கள் தனக்கே உரித்தான விசேடமான உற்பத்தியொன்றை மேற்கொண்டதன் காரணமாக ஏற்பட்ட தேர்ச்சி "சிறப்பத் தேர்ச்சி" எனப்படும்

**மிகை உற்பத்தி**

சிறப்பு தேர்ச்சியின் காரணமாக உருவாக்கப்பட்ட தேவைக்கு மேலதிகமான உற்பத்திகள் "மிகை உற்பத்திகள்" ஆகும்

**பயிற்சி**

1. வணிகத்தின் பரம்பலின் விசேட சந்தர்ப்பங்களை பெயர் குறிப்பிடுக
2. பணத்தின் பரம்பல் பற்றி விளக்குக
3. வணிகத்திற்கும் வியாபாரத்திற்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக
4. நிகழ்காலத்தில் இலத்திரனியல் வர்த்தகம் பிரபல்யமடைவதற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக
5. தகவல் தொழினுட்பத்தின் வளர்ச்சி காரணமாக வணிகத்துறையில் ஏற்பட்ட நவீன போக்குள் நான்கினைக் குறிப்பிடுக